ராணி காமிக்ஸ்
முரட்டுக் காளை
கார்த்
தோன்றும்
தங்கத் தீவு
ரூ 2

MAGGI CLUBBERS FUN LOVERS
MAGGI
CLUB
ஒன்று சோததிடுங்கள
மேகி ஜிக்-ஸா புதிர்
வானவீதியில் விர்ரிட்டுச்
செல்லுங்கள், உங்கள்
மேகி ஸ்கை
ப்ளேஸரில்!
WHO-DUN-IT
கடல்-வானப்பயணத்தை பூர்த்தி
செய்வீர் மேகி
ஏஸ அட்வென்ச்சரர்
கேமில்!
திருடனைப் பிடியுங்கள் மேகி
ஹூ-டன்-இட் மிஸ்டிரி
விளையாட்டில
உல்லாசம் பெறுவீர், வியப்பூட்டும்
துணிகர விளையாட்டுகள்
உறுப்பினர்களுக்
இலவசப் பரிசுகள்-மேகி கிளப் உறுப்பினர்களுக்
வஞ்சகமான எதிரிகளை
சாதுரியமாக முறியடியுங்கள்,
மேகி ரெய்டர்ஸ் ஆ.:.ப்
தி ரெட் ஸ்டார்
விளையாட்டில்!
Name
Membership no.
ஹல்லோ! மேகி கிளப்பில் சேருங்கள்: மேகியின்
துணிகர உலகிற்குள் செல்லுங்கள்.
ஐந்து மேகி நூடுல்ஸ் காலி பேக்குகளிலிருந்து அதன
முன்பக்கத்தில் உள்ள இந்த 2-minute noodles லேபிளை வெட்டி
எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள்-உங்களுக்குப் பிடித்த
இலவசப் பரிசைப் பெற. ஆறு முதல் எட்டு
வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து
குதூகலமளிக்கும் பரிசு உங்களுக்கு அனுப்பி
வைக்கப்படும்.
மறவாதீர்! உங்களுக்கு விருப்பமானப் பரிசைக்
குறிப்பிட்டு எழுதும்போது, உங்கள் பெயர், முகவரி,
பிறந்த தேதி ஆகியவற்றையும் எழுதுங்கள். ஏற்கனவே
நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால்,
உறுப்பினர் எண்ணையும் எழுதுங்கள். இதுவரை
உறுப்பினராக ஆகவில்லை என்றால் இப்போது
வருகிறது வாய்ப்பு! மேலே உள்ள விவரங்களை
எழுதும்போது, உறுப்பினராக விரும்புவதையும்
தெரிவியுங்கள். இலவசப் பரிசுடன், இலவச மேகி
கிளப் உறுப்பினர் அட்டையையும் உங்களுக்கு
அனுப்புவோம்.
எங்கள் முகவரி :
MAGGI CLUB
P.O. Box 5788 New Delhi-110 055
இலவசம்! மேகி "வோர்ட் ஆ.:.ப் அனிமல்ஸ்" புதிர்
ஒவ்வொரு) இலவசப் பரிசுகளுக்கும் உங்களுக்கு
ஒரு மேகி "வோர்ட் ஆ.:.ப் அனிமல்ஸ்" புதிர்
இலவசமாகக் கிடைக்கும்.
MAGGI
2-minute noodles
FAST TO COOK! GOOD TO EAT!

பெண் தலைமை நீதிபதி!

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக காந்தகுமாரி என்ற பெண்மணி பதவி ஏற்றிருக்கிறார்.

சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றிலேயே, ஒரு பெண் தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்றிருப்பது இதுவே முதல்முறை.

காந்தகுமாரி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள உதயப்பூரைச் சேர்ந்தவர். இவருக்கு 62 வயது ஆகிறது. இன்னும் திருமணம் செய்துகொள்ளாமல் பிரமச்சாரியாகவே இருந்து வருகிறார்.

சிறுவனின் இலட்சிய பயணம்!

பார்வையற்றோரிடம் அனுதாபம் ஏற்படுவது இயற்கை. ஆனால் வெறும் அனுதாபத்தினால் என்ன பயன்? இதை உணர்ந்துதானோ என்னவோ, மராட்டிய மாநிலத்தை சேர்ந்த ஏழு வயது சிறுவன் சுனில் சாஸ்திரி தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்கு செய்ய முன் வந்துள்ளான். அதுவும் கூட சாதாரண உதவியல்ல, சாதனையுடன் கூடிய உதவி.

டெல்லியிலிருந்து பம்பாய் வரை சைக்கிளில் பயணம் செய்து பார்வையற்றோர் சங்கத்திற்காக நிதி திரட்ட இருக்கிறான் இச் சிறுவன்.

இரு நகரங்களுக்கும் இடைப்பட்ட தொலைவோ 1,400 கி.மீ. ஜூன் முதல் தேதியன்று டெல்லியில் உள்ள விஜய் சவுக் (வெற்றி சதுக்கம்) என்ற பொருத்தமான பெயர் கொண்ட இடத்திலிருந்து சுனில் சாஸ்திரி தனது சைக்கிள் பயணத்தை தொடங்கினான்.

தபால் நிலையம்!

நம் நாட்டில் மொத்தம் எத்தனை தபால் நிலையம் இருக்கிறது தெரியுமா? ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 719 தபால் நிலையங்கள் உள்ளன. இதில் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் தபால் நிலையங்கள் கிராமப்புரங்களிலும், 16 ஆயிரம் தபால் நிலையங்கள் நகரங்களிலும் அமைந்துள்ளன. நாடு முழுவதும் 5 இலட்சத்து 20 ஆயிரம் தபால் பெட்டிகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. இதில் 4 இலட்சத்து 36 ஆயிரம் கிராம பகுதியிலும், 83 ஆயிரம் நகரங்களிலும் வைக்கப்பட்டு உள்ளன. 221 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கும், 4 ஆயிரத்து 607 மக்கள் தொகை கொண்ட பகுதிக்கும் ஒரு தபால் நிலையம் என்ற விகிதத்தில் அவை அமைந்துள்ளன.

புறாவின் வீரசாகம்!

முதல் உலகப்போரின்போது ஒரு புறா வீரசாகசம் செய்துள்ளது. 1917-ம் ஆண்டு பிரான்சில் போர் நடந்துகொண்டிருந்தபோது, புறாவுடன் ஒரு முக்கிய செய்தியை கட்டி அனுப்பி வைத்தனர். அந்தப் புறாவை ஜெர்மனி வீரர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டார். குண்டு பாய்ந்ததில் அந்த இரகசியச் செய்தி புறாவின் உடலில் புதைந்துவிட்டது. மரணத்துடன் போராடிய அந்த புறா, இரத்தம் சொட்டச் சொட்ட தலைமை காரியாலயத்தில் போய் விழுந்தது. செய்தியை உரியவர்களிடம் ஒப்படைத்தது. அந்தப் புறாவின் சேவையையும், தியாகத்தையும் பாராட்டும்வகையில் அதன் உடலில் பஞ்சடைத்து அருங்காட்சியகத்தில் வைத்து இருக்கிறார்கள்.



ராணி காமிக்ஸ்-193 ஜூலை 1-15
(மாதம் இருமுறை இதழ்) 1992

லண்டனில் ஒரு நாள் இரவு- முரட்டுக்காளை கார்த் அன்றைய செய்தித்தாளை படித்துக்கொண்டு இருந்தார். அப்போது-
யார் இந்த நேரத்தில் கதவை தட்டுவது?
கார்க் கதவைத் திறந்தார்.
கார்த்! என்னை உனக்குத் தெரிய வில்லையா?
பார்த்த நினைவு இருக்கிறது! ஆனால், எங்கே, எப்போது என்று தெரியவில்லை!
நான் பாதிரியார்! தூளித் தீவில் இருந்து வருகிறேன்!
தூளி தீவு...! நான் அங்கிருந்து இங்கே வந்து ரொம்ப காலம் ஆகிவிட்டதே...!
நீ அந்தத் தீவுக்கு எப்படி வந்தாய் என்பது நினைவு இருக்கிறதா?
3 மாத குழந்தையாக இருந்தபோது நீ வந்த கப்பல் மூழ்கிப்போகவே உன் பெற்றோர்கள் உன்னை கூடையில் வைத்து அனுப்பிவிட்டார்கள்.
நீ நேராக தூளித் தீவுக்கு வந்து சேர்ந்தாய்...!

எங்கள் தீவின் தலைவர் ராயன் உன்னை எடுத்து கார்த் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தார்.
ஆமாம்! ராயனையும் தெரியும் அவருடைய மனைவி தோராவையும் நினைவு இருக்கிறது!
பரவாயில்லை! நீ எதையும் மறக்கவில்லை!
உன் காதலி ஜெசியை உன் அப்பா சுட்டுக்கொன்றதால் நீ கோபத்தில் இங்கே வந்து விட்டாய்...!
இனிமேல் அந்தத் தீவுக்குப் போக மாட்டேன் என்று உறுதி செய்திருக்கிறேன்!
தெரியும் கார்த்! ஆனால், அந்தத் தீவு மக்களுக்கு உன் உதவி தேவைப்படுகிறது!
ஒரு கும்பல் தீவுக்குள் நுழைந்து நம் ஆட்களின் நிலங்களை குறைந்த விலைக்கு கேட்கிறார்கள். எதிர்த்துக் கேட்டால் விரட்டுகிறார்கள். மிரட்டுகிறார்கள்! கால்நடைகளை கொல்லுகிறார்கள். மீன்பிடி படகுகளை அடித்து நொறுக்குகிறார்கள்! அவர்களை எதிர்க்க முடியவில்லை!
தீவு அந்த அளவுக்கு கெட்டுப் போய்விட்டதா?

யார் அவர்கள்? எங்கே இருக்கிறார்கள்?
இரவில்தான் அவர்கள் தீவுக்குள் நுழைகிறார்கள்! தீவை சூறையாடிவிட்டு திரும்பிவிடுகிறார்கள்!
தடுக்க ஆளே இல்லையா?
அந்தக் கும்பலின் கொட்டத்தை அடக்க உன் ஒருவனால் தான் முடியும்!
சரி! காலையில் தீவுக்குப் புறப்படுவோம்!
நன்றி கார்த்! நான் அதற்குள் என் நண்பனை பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்!
சரி.
லண்டனில் எனக்கு ஆபத்து எதுவும் இருக்குமா?
இங்கு உங்களுக்கு எதிரிகள் யார் இருக்கிறார்கள்?
அப்போது—
இவன்தான் அவன். சத்தமில்லாமல் கதையை முடித்துவிட வேண்டியது தான்!
தூரத்தில் இருந்த கார் ஒன்று பாதிரியாரை நோட்டமிட்டது.

ஏன் இப்படி கண்மூடித்தனமாக போகிறான்?
அதற்குள் அந்தக் கார் பாதிரியார் மீது மோதியது. பாதிரியார் தூக்கி வீசப்பட்டார்.
ஆ...! அம்மா...!
படார்...!
உடனே கார்த் பாய்ந்து வந்தார்.
அடப்பாவி! கார் நிற்காமல் பறந்து விட்டதே!
அய்யோ...! பாதிரியார் இறந்துவிட்டாரே...! இது விபத்து அல்ல! பச்சைக் கொலை...!
உடனே கார்த் காவல் நிலையம் சென்றார்.
அவரை உங்களுக்குத் தெரியுமா?
எனக்கு மிகவும் வேண்டியவர்! அவரை கொன்றுவிட்டு கார் நிற்காமல் சென்று விட்டது!

சார்! அவசரமாக எனக்கு ஒரு வேலை இருக்கிறது! நான் புறப்படலாமா?
மரண அறிக்கை வந்த பிறகுதான் நீங்கள் புறப்பட முடியும்!
ஓ.கே. சார்! என் முகவரியைத் தருகிறேன்! அறிக்கை வந்ததும் என்னைக் கூப்பிடுங்கள்!
கார்த் பேராசிரியர் லூமியரைச் சந்தித்தார்.
பாதிரியாரின் மரண அறிக்கை வந்த பிறகுதான் நான் வெளியில் செல்ல வேண்டுமாம்!
நான் உடனடியாக தூளி தீவுக்குச் செல்ல வேண்டும்!
அப்படியா...!
மறுநாள் பாதிரியாரின் மரண அறிக்கை வந்ததும், பாதிரியாரை லண்டனிலேயே புதைத்துவிட்டு கார்த் தூளித் தீவுக்குப் புறப்பட்டார்.
அதோ... அதுதான் தூளித் தீவு...!
தெரியும்...! என் தீவைப் பற்றி எனக்குத் தெரியாதா?

பல ஆண்டுக்குப் பிறகு கார்த் தீவுக்கு வந்தார். நேராக ஜெசியின் கல்லறைக்குப் போனார்.
ஜெசி! திரும்பவும் இங்கே வந்திருக்கிறேன்! இங்குள்ளவர் களுக்கு என் உதவி வேண்டுமாம்...!
கார்த் தெருவில் நடந்து சென்றார்.
ஏய்...! நீ கார்த் தானே...!
ஆமாம்... நீ யார்?
ரூஸ்வெல்ட்! பாதிரியார் உன்னுடன் வர வில்லையா?
இல்லை...! அவர் இனி வருவது கஷ்டம்தான்!
கார்த் நேராக தன் வீட்டுக்கு வந்தார். கார்த்தின் தாய் தோரா கார்த்தை கட்டிப் பிடித்துக் கொண்டார்.
மகனே... கார்த்! நீ போனதில் இருந்து உன் அப்பா படுத்த படுக்கை யாகிவிட் டார்!
மகனே கார்த்! இப்பொழுது தான் வருகிறாயா? பாதிரியாரை எங்கே?
அப்பா...! நான் வந்து விட்டேன்...!
அவரை கொன்றுவிட் டார்கள்...!
கொன்றுவிட்டார்களா...! கொள்ளையர்கள்தான் அவரை பின்தொடர்ந்து வந்து கொன்றிருக்கிறார்கள்...!

கார்த்...! ஓய்வு எடுத்துக் கொள்...!
இல்லை அம்மா! நீங்கள் அப்பாவை கவனித்துக் கொள்ளுங்கள்...!
ரூஸ்வெல்ட்டும் மேரியும் என்னை அழைத்தார்கள். அதனால் அங்கேயே தங்கிக்கொள்ளு கிறேன்!
ஆமாம்! மேரி உன்னை நன்றாக கவனித்துக் கொள்வாள்...!
அம்மா! தினமும் உன்னை பார்க்க வருவேன்! அந்தக் கும்பலை விரட்டுவதுதான் என் வேலை!
மகனே! உன்னால்தான் இந்தத் தீவுக்கு மறுவாழ்வு கிடைக்கும்...!
தீவிலிருந்து 20 கி.மீ.க்கு அப்பால் ஒரு கப்பல் நின்றுகொண்டிருந்தது.
கார்த் இங்கே வந்துவிட்டானா?
ஆமாம் பாஸ்! தகவல் சொல்ல வந்த பாதிரியாரை கொன்றுவிட்டேன்!
சரி! நீ உடனே புறப்பட்டு இங்கே வா! கார்த்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
ஓ.கே. பாஸ்! இப்போதே புறப்பட்டு விடுகிறேன்!

இன்று இரவு நம் ஆட்களுடன் தீவுக்குச் சென்று கார்த்தின் கதையை முடித்து விடுங்கள்!
பாஸ்! யார் அந்த கார்த்?
அவன்தான் நமக்கு எமன்! கெலிகாப்டரை எடுத்துக் கொள்ளுங்கள்! எப்படியாவது அவனை தீர்த்துவிடுங்கள்!
அதேநேரம் தீவில்—
எங்களிடம் கையெழுத்துப் போட்டு பேப்பரை வாங்கிக்கொண்டார்கள்! வக்கீல்கூட நிலத்தை விற்கச் சொல்லு கிறார்!
இரவில் திடீரென்று அந்தக் கும்பல் தீவுக்குள் புகுந்து படகுகளை நாசம் செய்கிறார்கள்!
இந்த இடத்தை வாங்கி என்ன செய்யப் போகிறார்களாம்?
அவர்கள் தீவுக்குள் எப்படி நுழைகிறார்கள்?
இரவில் கெலிகாப்டரில் வருவதாக சிலர் சொல்லுகிறார்கள்!
சரி! நான் கடற்கரைக்குச் சென்று படகை பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்!

அரை மணிக்குப் பிறகு- கொள்ளையர்கள் துப்பாக்கியுடன் ரூஸ்வெல்டின் வீட்டை முற்றுகையிட்டார்கள்.
ஜோ! கார்த் இந்த வீட்டில்தான் தங்கி இருக்கிறான்! வா சுற்றி வளைப்போம்!
வீட்டுக்குள்— திடீரென்று- சன்னல் கண்ணாடியை உடைத்துக்கொண்டு ஒரு கல் வந்து விழுந்தது.
சிலிங்...!
ஆ... கொள்ளையர்கள் வந்து விட்டார்கள்!
மேரி விளக்கை அணை!
மேரி! நீ இங்கேயே இரு. நான் யார் என்று பார்த்துவிடுகிறேன்!
கார்த்! ஒரு நிமிடம் தருகிறேன். அதற்குள் மரியாதையாக வெளியே வந்துவிடு!
அவர்கள் வீட்டை சூழ்ந்துவிட்டார்கள்! நான் வெளியே போய்த்தான் ஆக வேண்டும்!

கார்த் இருளோடு இருளாக பதுங்கி வெளியே வந்து ஒருவனை வீட்டுக்குள் இழுத்துப் போட்டார்.
ஏய்...! சத்தம் போட்டே கழுத்தை நெரித்துவிடுவேன்!
யார் நீ? உங்களை இங்கே அனுப்பியது யார்?
நான் சொல்லமாட்டேன்! முடிந்தால் நீயே கண்டுபிடித்துக்கொள்!
ஏய்... கார்த்! மரியாதையாக வந்துவிடு!
இல்லை இந்த இடத்தை தரைமட்டமாக்கி விடுவோம்!
கார்த்...! பத்து எண்ணு வதற்குள் வெளியே வந்துவிடு!
டேய்... நீதான முதலில் போக வேண்டும்!
போ வெளியே!
கார்த் அவனை வெளியே தூக்கி வீசினார்.

ஏய்...! என்னை சுட்டுவிடாதே...! நான்தான் ஜோ!
ஆ...!
டுமீல்...
வெளியே வந்தது கார்த் என்று நினைத்து சரமாரியாக சுட்டார்கள்.
அடடே! தவறு செய்துவிட்டோமே! நம் ஜோவை கொன்று விட்டோமே!
அப்படியானால் கார்த் உள்ளேதான் இருக்க வேண்டும்!
ஜோவின் துப்பாக்கி யையும் அவன் எடுத்துக்கொண்டான் போலிருக்கிறது!
கெலிகாப்டரில் இருந்து ஒரு குண்டை தூக்கி போட்டுவிட்டால் அவன் கதை காலி!

அதற்குள் ஒரு-ரவுண்டு சரமாரியாக சுட்டார்கள்.
டுமீல்...! டுமீல்...!
டுமீல்...!
கார்த்தும், மேரியும் தரையோடு தரையாக படுத்துக்கொண்டார்கள்.
சில நிமிடங்களில்—
மேரி! துப்பாக்கிச சத்தம் நின்றுவிட்டது! நான் வெளியே போகிறேன்!
கார்த் துப்பாக்கியுடன் வெளியே வந்தார்.
செத்துப் போனவனையும் தூக்கிச் சென்றுவிட்டார்கள்!
அதோ கெலிகாப்டர் வருகிறது!
என்னை தீர்த்துக்கட்டத்தான் வருகிறது!

கெலிகாப்டர் கார்த்தை நோக்கி வந்தது.
டேய்... இவன்தான் கார்த்! தாழ்வாகப் பற! அவனை ஒரு கை பார்த்துவிடுவோம்!
என்னை நோக்கிதான் வருகிறது! வரட்டும்!
கெலிகாப்டர் தாழ்வாக வந்ததும், கார்த் அதில் தாவி ஏறினார்.
என்ன இது? திடீரென்று கெலிகாப்டரின் எடை கூடி விட்டது!
ஆமாம்! ஏன் இப்படிச் சாய்கிறது?
அதற்குள் கெலிகாப்டரின் கீழே தொங்கிக்கொண்டிருந்த கார்த் காற்றாடியை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்.
டமார்...!
டுமீல்...! டுமீல்...!

அய்யோ...! காற்றாடி பழுதடைந்துவிட்டதே!
கெலிகாப்டா தாறுமாறாக பறக்கிறதே!
அதற்குள்- கார்த் கெலிகாப்டரில் இருந்து கீழே குதித்தார்.
அவர்கள் முடிவை அவர்களே தேடிக் கொண்டார்கள்.
கெலிகாப்டர் கடலில் விழுந்தது
அதேநேரம் கப்பலில்-
கெலிகாப்டரில் இருந்து எதுவும் செய்தி உண்டா?
ஏன் இன்னும் வரவில்லை!
சார்...! கெலிகாப்டரில் ஏதோ கோளாறு ஏற்பட்டு கடலுக்குள் விழுந்துவிட்டது.

அநேகமாக இது கார்த்தின் வேலையாகத்தான் இருக்கும்!
தலைவன் மார்ட்டின் ஆத்திரப்பட்டான்.
என்னிடமே அவன் மோதிப் பார்க்கிறானா?
அவனை இப்படியே விட்டு வைக்கக்கூடாது! நான் பார்த்துக்கொள்ளுகிறேன்!
உடனே மார்ட்டின் தன் ஆட்களை அவசரமாக கூட்டினான்.
நம் ஆட்கள் நான்கு பேரை கார்த் கொன்றுவிட்டான்!
சரி! நாம் எதற்காக இங்கே வந்திருக்கிறோம்! ஏன் கார்த்தை கொல்ல வேண்டும்?
நாம் பதிலுக்கு கார்த்தின கணக்கை தீர்க்க வேண்டும்! அதனால்தான் உங்களை அவசரமாக அழைத்திருக்கிறேன்!
விபரமாக சொல்லுகிறேன். இந்தத் தீவில் தங்க நகைகள் புதைத்து வைத்திருக்கிறார்கள்!
தங்கமா? உண்மையாகவா...?
ஆமாம்! அதனால்தான் இந்தத் தீவை தங்கத் தீவு என்று அழைக்கிறார்கள்!

நாம் தங்கம் அனைத்தையும் எடுத்துவிட்டால் லண்டனுக்கு திரும்பிவிடலாம்!
இங்கே கோடி கோடியாக தங்கம் கிடைக்கிறது! விட்டுப் போகலாமா? சொல்லுங்கள்!
கோடி கோடியாகவா?
தங்கம் இருக்கிறது என்று யார் சொன்னது?
பல ஆண்டுகளுக்கு முன்பு கடல் கொள்ளையர்கள் தங்கத்தை இங்கேதான் பதுக்கி வைத்து இருக்கிறார்கள்!
இங்குள்ள மலைகளை குடைந்தால் தங்கம் பாளம் பாளமாக கிடைக்குமாம்!
சரி! தங்கத்தை எடுத்தால் எங்களுக்கு என்ன கிடைக்கும்?
என் மேல் நம்பிக்கை இல்லையா?
கிடைப்பதில் கால் பங்கை உங்களுக்கு கொடுத்து விடுகிறேன்! முதலில் கார்த்தை என்னிடம் கொண்டு வாருங்கள்!
மேரி வீட்டில்-
மேரி கொள்ளையர் களின் கெலிகாப்டர் கடலுக்குள் விழுந்துவிட்டது! ரூஸ்வெல்ட்டை எங்கே?
வெளியே போய் இருக்கிறார்!

மேரி! நான் இங்கு தங்குவதில் உனக்கு ஆட்சேபனை இல்லையே!
என்ன கார்த் இப்படி சொல்லி விட்டீர்கள்!
பல ஆண்டுக்குப் பிறகு எங்கள் தீவுக்கு வந்திருக்கிறீர்கள்!
ரூஸ்வெல்ட் வேகவேகமாக வந்தான்.
கார்த்! ஹெலிகாப்டர் கடலுக்குள் விழுந்து விட்டது!
அப்படியா? எங்கே போய்விட்டாய்?
என் படகுக்கு காவல் இருந்து விட்டு வருகிறேன்!
இன்னும் சில நாளில் அந்தக் கும்பலை விரட்டிவிடலாம்.
ஹெலிகாப்டரில் வந்து என்னைக் கொல்ல முயன்றார்கள். அவர்களுக்கு சரியான பாடம் கற்பித்து விட்டேன்!
கார்த்! இப்பொழுது கால்நடைகள் கொல்லப் படுவதில்லை. படகுகள் தாக்கப்படுவதில்லை!
மேரி! அவர்களை இன்னும் முழுவதுமாக அழிக்கவில்லை! எப்படியும் திரும்பி வருவார்கள்!

முதலில் யார் யாரிடம் கொள்ளையர்கள் இடத்தைக் கேட்டார்கள்?
ஒரு வயதானவர்தான் பேப்பரில் கையெழுத்து போட்டு இடத்தைக் கொடுத்திருக்கிறார்!
நான் அவரை பார்க்க வேண்டுமே!
இருவரும் அந்தப் பெரியவரிடம் வந்தார்கள்.
நான் என் இடத்தை 500 ரூபாய்க்கு விற்றேன்.
ஏன் இந்த அடிமட்ட விலைக்கு விற்றீர்கள்?
அப்படி விற்காவிட்டால் என்னை கொன்று விடுவதாக அந்தக் கும்பல் என்னை மிரட்டியது.
கவலைப் படாதீர்கள்...!
இருவரும் வெளியே வந்தார்கள்.
எதற்காக கொள்ளையர்கள் இப்படி நிலங்களை அபகரிக்கிறார்கள்... ஒன்றுமே புரிய வில்லையே!

மறுநாள் காலை–
கார்த்! நாங்கள் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லுகிறோம்! நீயும் வருகிறாயா?
கார்த், மேரி, ரூஸ்வெல்ட் மூவரும் படகில் புறப் பட்டார்கள்
இன்றைக்கு மீன் ஒன்றும் அகப்பட வில்லையே!
சரி! இன்னும் கொஞ்ச தூரம் அப்படியே போய் வரலாமே!
போகலாமே!
இரண்டு கி.மீ. சென்றதும்...
அது என்ன?
கடற்படையினரின் நீர்மூழ்கிக் கப்பல் போல் தெரிகிறதே!
கார்த்! வசமாக மாட்டிக் கொண்டாய்! இனி எங்களிடம் நீ தப்பிக்க முடியாது!
உடனே கார்த் கடலுக்குள் குதிக்க ஆயத்தமானார்.
வேண்டாம் கார்த்! அவர்களிடம் போகாதீர்கள்!
மேரி! படகை நொறுக்கி விடுவார்கள்!
இதோ வருகிறேன்!
மரியாதையாக இங்கே வந்துவிடு! இல்லாவிட்டால் கப்பலைக் கொண்டு படகை இடித்து நொறுக்கிவிடுவோம்!

உடனே கார்த் கடலுக்குள் குதித்தார்.
அவன் தண்ணீரைவிட்டு வெளிவந்ததும் சுட்டுத் தள்ளிவிடு!
இந்த முறை அவன் என்னிடம் இருந்து தப்ப முடியாது!
ஆனால் கார்த் தண்ணீருக்கு மேல் வரவே இல்லை.
அவனை எங்கே?
கடலுக்குள் குதித்து இரண்டு நிமிடம் ஆயிற்றே..!
அதேநேரம்– கார்த் கடலுக்குள் சென்று நீர்மூழ்கிக் கப்பலின் காற்றாடி சுழலாமல் இருக்க வலையை வைத்து இறுகக் கட்டினார்
மறுபடி தண்ணீருக்குள் நீந்தி படகை நோக்கி வந்தார்.
சரியாக படகுக்கு பின்னால் வந்தார்.
நான் இங்கே இருக்கிறேன். யாரும் திரும்பிப் பார்க்காதீர்கள்!

வலையை வைத்து கப்பலின் காற்றாடியை சுழலவிடாமல் கட்டிவிட்டேன். இனி கப்பல் நகராது!
நீங்கள் படகை கரைக்கு செலுத்துங்கள். நான் வந்துவிடுகிறேன்!
கார்த் படகுக்குப் பின்னால் இருந்து கட்டளைகளை பிறப்பித்துக்கொண்டு இருந்தார்.
திடீரென்று கார்த் கொள்ளையர்களுக்கு முன் தோன்றினார்.
இங்கே பாருங்கடா...! நான் இங்கே இருக்கிறேன்!
அதோ கார்த்! சுட்டுத்தள்ளு!
கார்த் மறுபடியும் தண்ணீருக்குள் மூழ்கிப் போனார்.
அவன் படகுக்குத்தான் செல்கிறான்! கப்பலை படகை நோக்கி செலுத்து!
இன்னும் என்னடா செய்கிறாய்? விரைவாக கப்பலை செலுத்து!
கப்பல் நகரமாட்டேன்கிறதே!
காற்றாடி சுழன்றால்தானே கப்பல் நகரும்.

கார்த் சன்னல் கதவை உடைத்து உள்ளே நுழைந்தார்.
எல்லாமே எலக்ட்ரானிக் சம்பந்தப் பட்டவைகள்! இது எப்படி இங்கே?
யாரும் பார்க்காத நேரம் கொள்ளையர் கள்தான் விட்டுச் சென்றிருப்பார்கள்!
ஓகோ...! கெலிகாப்டரில் வந்து இங்கே இறங்குகிறார்கள்!
அந்த கெலிகாப்டரைத்தான் நான் கடலுக்குள் விழ வைத்துவிட்டேனே!
தீவில் தங்கம் எதுவும் கிடைக்கிறதா?
தங்கமா! இல்லையே!
ஒருவேளை பழங்காலத்து கடல் கொள்ளையர்கள் தங்கங்களை இங்கே புதைத்து வைத்திருக்கி றார்களா?
அதை சூறையாட இவர்கள் வந்திருக்கலாம்!

இந்தத் தீவைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே?
டேவிட்...! நமக்குத் தெரியாமலே எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கலாம்!
கார்த், பாதிரியாரின் வீட்டுக்கு வந்தார். அங்கு வேறு ஒரு பாதிரியார் இருந்தார்.
காாத் அவர் எனககு ரொம்பவும் நெருக்கம்! பாவம் கடைசியில் இப்படி ஆகிவிட்டது!
சே! என் கண் முன்னே இப்படி நடந்துவிட்டது!
கோவிலில் பூஜை நடந்தது.
கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆமென!
இந்தத் தீவில் மொத்தம் 50 குடும்பம் இருக்கிறது! அதில் யார் கொள்ளையர்களுக்கு உதவியாக இருப்பது?

மேரி வீட்டில்-
கார்த்! நான் காலையில் உன்னை பார்க்கிறேன்!
மேரி...! இந்த நேரத்தில் ரூஸ்வெல்ட் எங்கே போகிறான்?
மீன் பிடிக்க! இரவில் சென்றால் நிறைய மீன் கிடைக்குமாம்!
அவன் ஏன் இரவில் மீன் பிடிக்கப் போகிறான்? சந்தேகமாய் இருக்கிறதே!
அவனிடம் கேள்வி கேட்டால் எரிந்துவிழுவான்!
உடனே கார்த்தும் புறப்பட்டார்.
ஓ.கே. கார்த்!
மேரி! வீட்டைப் பூட்டிக்கொள். நான் வெளியே போகிறேன்!
ரூஸ்வெல்ட்...! கடற்கரைக்குச் செல்லாமல் மலைப் பகுதிக்கு ஏன் செல்கிறான்!

பாதிரியார் உடுத்தும் அங்கி வேறு அணிந்திருக்கிறான்! யாருக்கு சிக்னல் கொடுக்கிறான்?
கார்த் அவனை பின்தொடர்ந்தார்.
எதிர்முனையில் இருந்து பதில் வரவலலை! அப்படியானால் கொள்ளையர்களும் இவனும் தினமும் 10 மணிக்கு இங்கே சந்திக்கிறார்கள்!
கார்த் வீட்டில் அவனுக்காக காத்திருந்தார்.
என்ன ரூஸ்வெல்ட்? அதற்குள திரும்பிவிட்டாய... மீன் பிடிக்க போக வில்லையா?
இல்லை கார்த்! அதற்குள் மனது மாறிவிட்டது!
ரூஸ்வெல்டுதான் கொள்ளையர்களுக்கு உடந்தையாக செயல்படுகிறான்!
மறுநாள்– கார்த்தும் டேவிட்டும் சந்தித்தார்கள்.
கொள்ளையர்கள் கப்பலை 20 கி.மீ.க்கு அப்பால் நிறுத்தியிருக்கிறார்கள்!
இருக்காது கார்த்! நாங்கள் யாரும் பார்த்ததில்லையே!
நான் சொல்வது உண்மை! அவர்களை பிடிக்க நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்!
என்ன திட்டம்?

அதாவது உன்னுடைய நிலத்தில் புதையல் தங்கம் இருக்கிறது என்று புரளியை கிளப்பிவிட்டால், கொள்ளையர்கள் உன் நிலத்தை வாங்க வருவார்கள்!
அப்பொழுது அவர்களை அமுக்கிவிடலாம் என்கிறாயா?
அன்று மாலை–
என்ன விசயம்?
ரூஸ்வெல்ட்! இன்று பார்த்தேன்!
டேவிட் நிலத்தில் உள்ள பாழடைந்த கிணற்றில் தங்க நகைகள் கிடைத்திருக்கின்றன!
உண்மையாகவா?
அதன் மதிப்பு அதிகமாம்?
பரவாயில்லை அவன் அதிருஷ்ட சாலிதான்!

இத்தனை நாளைக்கப்புறம் இன்றைக்குத்தான் கிடைத்திருக் கிறதா!
எல்லாத்துக்கும் நேரம் வரவேண்டாமா?
மணி 9½ ஆகிறது. 10 மணிக்கு ரூஸ்வெல்ட் கொள்ளையர்களை சந்திப்பான்.
அவர்களிடம், டேவிட் நிலத்தில் புதையல் கிடைத்ததை கண்டிப்பாக சொல்லுவான்.
கார்த்! டேவிட் நிலத்தில் புதையல் என்று கரடிதானே விட்டீர்கள்!
ஆமாம் மேரி!
அவன் உங்களை எவ்வளவு நம்புகிறான். ஏன் அவனை இப்படி ஏமாற்றுகிறீர்கள்!
அவனுககு தங்கக் காயச்சல் வந்துவிட்டது!
நான் சொல்வது உனக்குப் புதிராகத் தான் இருக்கும். விரைவில் உண்மை தெரியும் பார்!

இது என்னுடைய திட்டத்தின் முதல் படி!
அதற்காக என் அண்ணனை ஏமாற்ற வேண்டுமா?
ஒரு பாவமும் அறியாதவர்! வெகுளி!
ரூஸ்வெல்ட் வெகுளியா? பார்ப்போம்!
கார்த் விரைவாக வெளியே வந்தார்.
ரூஸ்வெல்ட்டைப் பற்றி மேரிக்கு எப்படி புரிய வைப்பது?
கார்த் நேராக படகுத் துறைக்கு வந்தார்.
கார்த்...! எங்கே போகிறாய்? படகில் என்ஜின் இல்லை!
இதோ இப்பொழுது வந்துவிடுகிறேன்!
காற்று அதிகமாக இருக்கிறது! அப்படி என்ன அவசர வேலை? கார்த்...!
கொள்ளையர்களை மடக்க நீ மட்டும் தனியாக செல்ல வேண்டாம்!
ரூஸ்வெல்ட்டை பின்தொடர்ந்து செல்கிறேன்!

4 கி.மீ.க்கு அப்பால்-
அதோ கப்பல் நிற்கிறது!
ரூஸ்வெல்ட் கொள்ளையர்களிடம் ஏதோ சொல்லுகிறான்!
மார்ட்டின்...! நான் ஒரு செய்தியுடன் வந்திருக்கிறேன்!
சரி, மேலே வா!
கார்த் பைனாகுலர் வழியாக நோட்ட மிட்டார்.
சே...! ரூஸ்வெல்ட் எப்பொழுது இப்படி பச்சைத் துரோகியாக மாறினான்!
கப்பலில்-
என்னது பழைய கிணற்றில் புதையல் தங்கமா?
ஆமாம்! என்னுடன் வாருங்கள். காட்டுகிறேன்!
கார்த் படகை கப்பலுக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு கப்பலில் ஏறினார்.

நாளை நம் ஆட்களுடன் சென்று அவனிடம் நிலத்தை எழுதி வாங்கி விடுங்கள்!
தங்கம் இருக்கிறதா இல்லயா என்று பார்த்துவிடலாம்!
பாஸ்...! முரட்டுக் காளை கார்த் இதை முறியடிக்க முயலுவானே:
தெரியும்!
அந்தக் காளையை நான் அடக்குகிறேன்:
அநத முரட்டுக்காளை என்னிடமே வம்பு செய்து கொண்டிருக்கிறது! அதன் கதையை முடிக்கிறேன் பார்!
கார்த் மேலே இருந்து கேட்டுக்கொண்டிருந்தார்.
தீவு மக்கள் வேறு யாராவது குறுக்கே வந்தால் தீர்த்துவிடுங்கள்!
பாஸ்! எனக்குச் சேர வேண்டியது...!
பேசாதே! உன் மாமா தீவுக்குச் சொந்தமான நகைகளை கொள்ளையடித்துவிட்டுச் சென்றதை மறந்துவிட்டாயா? அதை வெளியில் சொன்னால்...!
ரூஸ்வெல்ட்டை மிரட்டினான்.

சரி! நான் புறப்படு கிறேன்!
வேண்டாம் ரூஸ்வெல்ட்! நீ நிறைய குடித்திருக்கிறாய்! காலையில் போகலாம்!
டேய்...! அவனை அந்த அறையில் தள்ளுங்கடா காலையில் அவனை அழைத்துச் செல்லலாம்!
உடனே கார்த் கரைக்குப் புறப்பட்டார்.
இவனை எதற்கு அடைத்து வைத்து இருக்கிறீர்கள்?
சின்ன மீனைப் போட்டுத்தான் பெரிய மீனை பிடிக்க வேண்டும்!
கார்த் கரைக்கு வந்தார். அங்கே டேவிட் காத்திருந்தார்.
லண்டனில் இருக்கும் பயங்கர குற்றவாளிகளில் ஒருவன் மார்ட்டின் அவன்தான் இங்கு முகாமிட்டிருக்கிறான்!
இல்லை! அவன் இப்போது அவர்களிடம் கைதியாக இருக்கிறான்!

அவர்கள் பயங்கரமான ஆயுதங்களுடன் நாளை உன் இடத்துக்கு வருவார்கள்!
அதற்குமுன் நீ உன் குடும்பத்தை வேறு இடத்துக்கு மாற்றிவிடு!
சரி! அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
கடற்கரை ஓரமாக அழைத்துச் செல்லாதே! கொள்ளையர்கள் அந்தப் பக்கம் அலைந்து கொண்டிருக்கக்கூடும்!
ஓ.கே. கார்த்!
மேரி வீட்டில்—
கார்த...! ரூஸ்வெல்ட்டை காணவில்லை! எனக்கு பயமாக இருக்கு!
கொள்ளையர்கள் உன் அண்ணனை பிடித்து வைத்திருக்கிறார்கள்!
எனக்கு உன் மாமாவை பற்றிய உண்மை வேண்டும்!
அவர் தீவுக்குச் சொந்தமான நகைகளை கொள்ளையடித்து இங்கு ஓர் இடத்தில் புதைத்துவிட்டு தலைமறைவாகி விட்டார்!
அவர் இறந்து விட்டார்! அந்த நகைகளை எடுக்கத்தான் இந்தக் கும்பல் வந்திருக்கிறது. உன் அண்ணனுக்கு இடம் தெரியும் என்று அவனை பிடித்து வைத்திருக்கிறார்கள்!
U44

மறுநாள்– பொழுது விடிந்தது. கடற்கரையில் கார்த்தும் இன்னும் சிலரும் காத்திருந்தார்கள்.
அதோ... கொள்ளையர்கள் வருகிறார்கள்!
சரி, அனைவரும் போய் மறைந்து கொள்ளுங்கள்!
கொள்ளையர்களின் படகு கரைக்கு வந்தது.
ஏய்... ரூஸ்வெல்ட்! அந்த இடத்திற்கு எங்களை அழைத்துச் செல்!
படகு காவலுக்கு ஒருவனை நிற்க வைத்துவிட்டு அனைவரும் போகிறார்கள்.
கார்த், ஒரு கல்லை எடுத்து கடலில் போட்டு படகுக் காரர்களின் கவனத்தை திசை திருப்பினார்.
என்ன இது...?
தொபீர்...!
அவன் சற்றும் எதிர்பார்க்காத நேரம். கார்த் அவன் மீது பாய்ந்து அவனைத் தாக்கினார்.
ஆ...!
கும்...!
இனி...! கப்பலுக்குச் செல்ல வேண்டியது தான்!

டேவிட்...! இவனை பத்திரமாக வைத்து இருக்க வேண்டும்!
இரண்டு பேரை மட்டும் என்னுடன் கப்பலுக்கு அனுப்பு!
நீங்கள் துறைமுகத்துக்கு வந்துவிடுங்கள்! நானும் அங்கே வந்து விடுகிறேன்!
படகு புறப்பட்டது. கார்த் கடலில் நீந்தியபடி படகை பின்தொடர்ந்தார்
கப்பலில் ஒருவன் இருக்கிறான். அவனுடன் நீங்கள் பேச்சுக் கொடுங்கள்!
அலோ...! என்னிடம் பெட்ரோல் தீர்ந்துவிட்டது! கொஞ்சம் பெட்ரோல் கொடேன்!
டேய் போங்கடா! பெட்ரோல் கொடுக்க முடியாது.
அதற்குள் கார்த் கப்பலில் ஏறி அவனுக்குப் பின்பக்கமாக வந்து அவனைத் தூக்கி கடலில் வீசினார்.
ஆ...ஆ...

மேலே– ஒருவன் குடிபோதையில் இருந்தான்.
டாம்...! இந்தா ஒரு ரவுண்டு குடித்துவிட்டுப் போ!
கார்த்தை அவன் கூட்டாளி என்று நினைத்துவிட்டான்!
கார்த் ஓங்கி ஒரு குத்து விட்டார்.
ஒரு ரவுண்டுதானே! இந்தா வாங்கிக்கொள்!
கொஞ்சம் பொறுங்கள்! கப்பலில் வேறு யாராவது இருக் கிறார்களா என்று பார்த்து வருகிறேன்!
கார்த், கப்பலின் கீழ் தளத்துக்கு வநதார்
நீங்கள் மார்ட்டினின் ஆட்களா?
இல்லை! அவன் எங்களை சிறை வைத் திருக்கிறான்!
அப்படியா? இனி மார்ட்டின் திரும்பி வரமாட்டான்! நீங்கள் கப்பலை எடுத்துக்கொண்டு தப்பித்துவிடுங்கள்!


கார்த் படகுக்கு வந்ததும் படகு கரையை நோக்கி புறப்பட்டது.
கப்பல் புறப்பட்டுவிட்டது! இனி படகை வேகமாக கரைக்குச் செலுத்து!

தீவில்—
வீட்டில் யாருமே இல்லையே!
கார்த் அவர்களை மறைத்து வைத்திருப்பான்!

ரூஸ்வெல்ட்! அவர்கள் எங்கே இருப்பார்கள் சொல்!
எனக்குத் தெரியாது!

வாங்கடா!
யாரோ அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள்!

கார்த் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்.
கார்த்...! கொள்ளையர்கள் துறைமுகத் துக்குத்தான் வருகிறார்கள்!
வரட்டும்! ஒரு கை பார்க் கிறேன்!
பாஸ்...! நம் கப்பலை காணவில்லை!
என்ன...! கப்பலை காணவில்லையா? இதுவும் கார்த்தின் வேலைதான்!
அப்போது- கொள்ளையர்கள் தன் அண்ணனை பிடித்து வைத்து இருப்பதை மேரி பார்த்தாள்.
அதோ! என் அண்ணன்!
கார்த்...! மேரி அல்லவா ஓடுகிறாள்!
அடிப்பாவி! அண்ணனை பார்த்துவிட்டாள் போலிருக்கிறது!
முட்டாள்! அவசரப்பட்டு விட்டாளே!
அவளையும் பிடித்து வைத்து விடுவார்களே....
அங்கே-
அய்யோ! தயவுசெய்து என் அண்ணனை விட்டு விடுங்கள்!
நீதான் பதுங்கிக்கொள்ள இடம் கொடுத்திருக்கிறாயா!

பாஸ்...! மழை வரும் போலிருக்கிறது!
நாம் ஒதுங்கிக்கொள்ள ஒரு இடம் பார்!
அனைவரும் ஒரு மலைக் குகைக்கு வந்தார்கள்.
இந்தக் குகைக்குள் சென்றால் கார்த்தின் கண்ணில் இருந்து தப்பியது போலிருக்கும்!
கார்த்! அவர்கள் குகைக்குள் நுழைந்து விட்டார்கள்
பிறகு வந்து தங்கத்தை எடுப்போம்!
டேவிட்...! இந்தக் குகைக்கு பின்பககம் ஒரு வழி இருக்கிறது அல்லவா?
நாம் முதலில் மேரியையும், ரூஸ்வெல்ட்டையும் காப்பாற்ற வேண்டும்.
அது எப்படி முடியும்?
டேவிட்... நான் புகைக் குண்டு வைத்திருக்கிறேன். அதை என்ன செய்கிறேன் பார்!

கார்த்தும் டேவிட்டும் பின்பக்க வழியாக குகைக்குள் நுழைந்தார்கள்.
டேவிட்... நீ இங்கேயே இரு! நான் உள்ளே சென்று பார்த்து வருகிறேன்!
கார்த்! அவர்கள் துப்பாக்கி வைத்து இருக்கிறார்கள். எச்சரிக்கை...!
கார்த் அந்தக் குகையின் பின் வழியாக உள்ளே வந்தார்.
ஓர் இடத்தில்-
அதோ... வருகிறார்கள்!
உடனே கார்த் புகைக்குண்டைத் தூக்கி அவர்களை நோக்கிப் போட்டார்.
மேரி! ரூஸ்வெல்ட்...! தப்பி ஓடுங்கள்! நான்தான் கார்த்...!

புகைக் குண்டு புகையை கக்கியபடி மார்ட்டின் முன் விழுந்தது.
கார்த்...! மரியாதையாக வெளியே வந்துவிடு! இல்லாவிட்டால் இவர்கள் இருவரையும் சுட்டுக் கொன்றுவிடுவேன்!
கார்த்... வராதீர்கள்!
மேரி! நீ ஓடிவிடு...! நான் இவர்களை பார்த்துக்கொள்ளுகிறேன்!
டுமீல்...!
டுமீல்...!
ஆ...அம்மா...!
ரூஸ்வெல்ட் மார்ட்டினின்மேல் பாய்ந்தான். அதற்குள், மார்ட்டின் ரூஸ்வெல்ட்டை வெறித்தனமாக சுட்டுத்தள்ளினான்.
கார்த் என்ன துப்பாக்கிச் சத்தம்...!
வா மேரி! தப்பிவிடலாம்!
கார்த்தும், மேரியும் குகையைவிட்டு வெளியே ஓடிவந்தார்கள்.
அவர்கள் இருவரையும் விடாதீர்கள்!

புகை மார்ட்டினை இறங்கச் செய்தது.
மேரி! மேரி! பதட்டத்தில் மயங்கிவிட்டாள்!
அய்யோ...! நாம் இங்கிருந்து உடனே துறைமுகத்துக்கு புறப்பட வேண்டும்!
ரூஸ்வெல்! எங்கே? என்ன ஆனான்?
அவனை மார்ட்டின் சுட்டுக் கொன்றிருப்பான் என நினைக்கிறேன்! மேரியிடம் சொல்ல வேண்டாம்! முதலில் மார்ட்டினை மடக்க வேண்டும்!
அவர்கள் படகைத் தேடி கடற்கரைக்குத்தான் செல்கிறார்கள்!
பாஸ்...! அதோ கடற்கரையில் விளக்கு ஒளி தெரிகிறது!
வாருங்கள்! நமது படகுதான். கார்த் வருவதற்குள் படகில் தப்பி விடலாம்!

பாஸ்!
கடலில் அலைகளின் கொந்தளிப்பு அதிகமாக இருக்கிறதே!
மழை வலுத்தது.
அதோ கார்த்...! சுட்டுத்தள்ளுங்கள்!
வேண்டாம்! முதலில் நாம் தப்பிக்க வழியைப் பார்ப்போம்!
அய்யோ! படகில் தண்ணீர் ஏறிவிட்டதே! இனி என்ன செய்வது?
அதோ அந்தப் பகுதியில் சுழல் இருக்கிறது! படகு அதில் மாட்டிக்கொண்டால் அவ்வளவுதான்!
அவர்கள் நினைத்தது போலவே படகு சுழலுக்குள் சிக்கி, அனைவரையும் உள்ளுக்குள் இழுத்தது.
கார்த் ரூஸ்வெல்ட்டை பார்த்தார்.
சே...! இப்படி பரிதாபமாக உயிரை விட்டு விட்டான்!
நமக்கு துரோகம் செய்ய நினைத்தான். முடிவை அவனே தேடிக் கொண்டான்.
கொள்ளையர்கள் சுழலுக்குள் சிக்கி உயிரை விட்டார்கள்.

டேவிட்! ரூஸ்வெல்ட் கொள்ளையர்களுக்கு உடந்தையாக இருந்தது யாருக்கும் தெரிய வேண்டாம்!
ஆகட்டும் கார்த்!
மேரி! உன் அண்ணன் இறந்துவிட்டான்! தைரியமாக இரு!
அய்யோ! என்னைக் காப்பாற்றுவதற்காக அவர் உயிரை விட்டுவிட்டாரே...!
ல் புதையல் தங்கம் இருக்கிறது என்று நம்புகிறார்களே உண்மையா?
முன்பு இருந்தவர்கள் தங்கள் தேவைக்குப் போக மீதியுள்ள தங்கத்தை புதைத்து வைத்ததாக சொல்லுவார்கள்!
கார்த் தன் காதலி ஜெசியின் கல்லறைக்கு வந்தார்.
ஜெசி! தீவில் அமைதியை ஏற்படுத்திவிட்டேன்! நான் லண்டனுக்கு புறப்படுகிறேன் ஜெசி!
கார்த் கப்பலில் லண்டனுக்குப் புறப் பட்டார்.
மகனே கார்த்! எங்களுடன் இங்கேயே இருந்துவிடு ராஜா!
இல்லை அம்மா! அவசியம் திரும்பவும் வருகிறேன்!
உண்மையிலேயே கார்த் நெஞ்சழுத்தக்காரன்தான்!
பழையதை இன்னும் அவன் மறக்கவே இல்லை!
முடிந்தது

கிட் கார்சன் தோன்றும்

மர்ம மாளிகை

ஒருநாள் கிட்கார்சன் தன் ஆட்களுடன் மாட்டு மந்தையை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு, இரவு ஆனதும் பள்ளத்தாக்கு வழியாக மந்தையை பண்ணைக்கு ஓட்டி வந்துகொண்டிருந்தார், அப்போது–
ஒரு கொள்ளைக் கும்பல் துப்பாக்கியுடன் மாட்டு மந்தையை அபகரிக்க முயன்றது. கிட்கார்சன் விடுவாரா என்ன? அவர்களை எதிர்த்துப் போராடினார். கொள்ளையர்கள் சரமாரியாக சுட்டார்கள். பதிலுக்கு கிட் சனும் அவர்களை நோக்கிச் சுட்டார்.

கிட்கார்சனின் தாக்குதலை சமாளிக்கமுடியாமல் கொள்ளையர்கள் ஓட்டம் பிடித்தார்கள்.
ஏய்...! விரைவாக வாருங்கள்!
சே...! அவர்கள் சுதாரித்து விட்டார்களே!
கிட்கார்சன் மந்தையை கொள்ளையர்களிடம் இருந்து காப்பாற்றி பத்திரமாக பண்ணைக்கு ஓட்டிவந்தார்.
பெர்கின்! கொள்ளையர்களை சமாளித்து வருவதற்குள் தாமதமாகிவிட்டது!
அனைவரும் தப்பிவிட்டனர்!
பரவாயில்லை கார்சன்! என் மந்தையை கொள்ளையா களிடம் இருந்து காப்பாற்றிவிட்டாய்! ரொம்ப நன்றி!


பெர்தின்! கொள்ளையர்கள் வந்து போன இடத்தில் இந்த துப்பாக்கிக் குண்டு கிடந்தது. அதில் ஸ்பெயின் மொழி எழுதப்பட்டிருக்கிறது!
ஸ்பெயின் மொழியா?
ஓகோ! அப்படியானால் அவர்கள் மெக்சிகோவின் எல்லையை சேர்ந்தவர்களாக இருக்கும்

அதேநேரம்— ஓர் இடத்தில் கொள்ளையர்கள் முகாமிட்டிருந்தார்கள்.
சே! ஒரு பெரிய மந்தையையே கோட்டை விட்டுவிட்டோமே...!
கிட்கார்சன் இல்லாவிட்டால் காரியத்தை எளிதாக முடித்திருக்கலாம்!
சரி! நடந்தது நடந்துவிட்டது! இனி நடக்க வேண்டியதைப பார் முதலில் கிட்கார்சன் கதையை முடிக்க வேண்டும்!

அதேநேரம்- கிட்கார்சன் குதிரையில் வந்துகொண்டிருந்தார். அவரை ஒருவன் பின் தொடர்ந்தான்.
GUNSMITH
எப்படியும் மார்க்கிடம் விவரம் கேட்டு விடலாம்!
ஓர் வீட்டில் கிட் விசாரித்தார்.
மார்க் இல்லையா?
இல்லை! அவர் மதுக்கடைக்குச் சென்றிருக்கிறார்!
சரி, என் குதிரை இங்கே நிற்கட்டும். நான் போய் அவரை பார்த்து வருகிறேன்!
வீட்டுக் கூரையின் மீது கொள்ளையன் பதுங்கி இருந்தான்.

கிட் நேராக மதுக்கடைக்கு வந்து மார்க்கை சந்தித்தார்.
கிட்! உனக்கு என்ன வேண்டும்?
ஒரே ஒரு சின்ன உதவி வேண்டும்!
இந்த துப்பாக்கி குண்டைப் பற்றி குறிப்பு வேண்டும்!
இது மெக்சிகோவில் தயாரிக்கப்பட்டது. இராணுவத் தினருடையது போலிருக்கிறது!
சார்லசின் கும்ப பள்ளத்தாக்கில் அலைந்துகொண்டிரு பதாக கேள்விப் பட்டேன். அவனுடைய அண்ணன் மெக்சிகோவில் இருக்கிறான். அவன்தான் சார்லசுக்கு ஆயுதங்கள் கொடுக்கிறான் என்று நினைக்கிறேன்!
ஆனால் கொள்ளையாகள் ஸ்பெயின் காரர்கள இல்லை. ஒருவருக்கொருவர் ஆங்கிலத்திலேயே பேசிக்கொணடார்கள!
ஒருவன் சன்னல் வழியாக நோட்டமிட்டுக் கொண்டிருந்தா

வழியாக பார்த்தார்.
உடனே கிட் துப்பாக்கியை எடுத்து சன்னலை நோக்கிச் சுட்டார்.
யாரடா நீங்கள்...?
டுமீல்...!
டுமீல்...!
விளக்குகள் அணைந்தன.
துப்பாக்கிக் குண்டுகளை கண்டு நடுங்கிப் போன மார்க் பதுங்கிக்கொண்டார்.
டுமீல்...!
டுமீல்...!


கொள்ளையர்கள் தொடர்ந்து சுட்டனர். கிட் பியானோ பெட்டிக்கு பின் பதுங்கிக் கொண்டார்.
ஒரு கூட்டமே வந்திருக்கிறதே!
கிட் அந்த பியானாவை தள்ளிக் கொண்டே வெளியே வந்தார்.
டேய்...! அவனை தப்ப விட்டுவிடாதீர்கள்! சுட்டுக் கொல்லுங்கள்!
கிட், பியானோவை தள்ளிக்கொண்டே கொள்ளையர்களை சுட்டு வீழ்ததினார்.
டுமீல்...!
டுமீல்...!
டுமீல்...!
டுமீல்...
கொள்ளையர்கள் நாலாபுறம் இருந்து சுட்டார்கள்.

மதுக்கடையில் இருந்து மார்க் வீடு வரை பியானோ மூலம் தப்பி வந்த கிட், குதிரையில் ஏறி சிட்டாக பறந்தார்.
நான் இங்கே ஒரு நிமிடம்கூட இருக்கக்கூடாது!
அன்று மதியம் கிட்டுக்கு ஒரு செய்தி வந்தது.
கிட்...! கொள்ளையர் தலைவன் சார்லஸ் மெக்சிகோவின் எல்லையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறான்!
சரி! நான் அவனை பின்தொடர்ந்து செல்கிறேன்!
கிட் சார்லசை பின்தொடர்ந்து வந்தார். சார்லஸ் ஒரு பெண்ணுடன் மெக்சிகோ நகரில் ஒரு மாளிகைக்குள் நுழைந்தான்.
யாருடைய மாளிகை இது?
ஒருவனிடம் கிட் விசாரித்தார்.
இந்த மாளிகை யாருடையது?
அண்ணன்- தம்பிகள் இருக்கிறார்கள். உள்ளே நடப்பது மர்மமாகவே இருக்கும். அதனால் இதற்கு மர்ம மாளிகை என்று பெயர் உண்டு.

மாளிகைக்குள்– சார்லஸ், அவனுடைய அண்ணன் எல்லாரும் இரகசியமாக சந்தித்துப் பேசிக்கொண்டார்கள்.
பெர்தினின் மந்தை இந்த முறை என்னிடமிருந்து தப்பிவிட்டது! ஆனால் எப்படியும் அவன் சொத்துக்களை கொள்ளையடிக்காமல் விட மாட்டேன்!
எப்படியோ...! செய்வதை விரைவாக செய்து முடி!
வெளியே– கிட்கார்சன் ஒரு கயிறை அந்த மாளிகையின் கூரையின் மீது வீசினார்.
அப்படி என்ன மர்மம் நிலவுகிறது. அதையும் பார்த்து விடுகிறேன்!

கிட்கார்சன் அந்த கயிறு வழியாக விர்ரென்று மேலே ஏறினார்.
அதேநேரம்- மாளிகைக்குள்...
பெர்தினின் மகள் ரூபி படிப்பை முடித்துவிட்டு பண்ணைக்கு வருகிறாள். அவளை கடத்தி அவள் அப்பனிடம் இருந்து சொத்தைப் பறிக்கலாமா?
அப்போது- கிட் சுவரில் ஏறி அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை கூர்ந்து கவனித்தார்.

ரூபியை கடத்தியதும், பெர்தின் ஆட்கள் அனைவரும் ரூபியை தேடி வருவார்கள். அதற்குள் பண்ணையை கொள்ளை யடித்துவிடலாம்!
இது பெரிய திட்டம்! எதற்கும் பார்த்துச் செயல்படு!
அதேநேரம்- கொள்ளையன் ஒருவன்,கிட் நோட்டமிடுவதைக் கண்டான். உடனே அவன் கத்தியை எடுத்தான்.
கிட்டை நோக்கி வீசினான். அதற்குள் கத்தியைக் கண்ட கிட், லாவகமாக தப்பித்தார்.


கத்தி நேராக மாளிகைக்குள் வந்து விழுந்து, இரகசியம் பேசிக் கொண்டிருந்தவர்களின் கவனத்தை சிதறடித்தது.
அதோ சுவரில் ஒருவன் நிற்கிறான்!
யார் அவன்? சுட்டுத் தள்ளுங்கள்...!


உடனே அவர்கள் துப்பாக்கியை எடுத்து கிட்டை நோக்கிச் சுட்டார்கள்.
டுமீல்...!
டுமீல்...!


கிட் வெளியே இருந்தவன் மீது குதித்தார்.
ஆ...! அம்மா...!
கொள்ளையர்களிடம் இருந்து தப்பி கிட் குதிரையில் ஏறி சிட்டாகப் பறந்தார்.
ஏதோ பெரிய திட்டம் போடுகிறார்கள்! எப்படியாவது அதை முறியடிக்க வேண்டும்!
பெர்தினின் மகள் ரூபி படிப்பை முடித்துவிட்டு ரெயிலில் ஊருக்கு வந்தாள். கொள்ளையன் ஒருவன் அவளை நோட்டமிட்டான்.
PULLMAN

அவளுக்காக வண்டி தயாராக இருந்து.
மேடம்! நான் உங்கள் பண்ணையில் வேலை செய்கிறேன்! அப்பாதான் என்னை அனுப்பி வைத்தார்!
வண்டி புறப்பட்டது.
வண்டி புறப்பட்டுவிட்டது. இனி நம் வேலையை தொடங்க வேண்டியதுதான்!
கிட்! பெர்தின் மகள் ரூபி வருகிறாள். அவளுக்காகத்தான் இங்கே காத்திருக்கிறேன்!
அடக்கடவுளே...! இன்றைக்கு ரூபி வருகிறாளா?
வழியில் பெர்தின் பண்ணை ஆள் ஒருவனை கிட் பார்த்தார்.
செய்தியை கேள்விப்பட்டதும் கிட்டாகப் பறந்தார்.
பாவிகள்! இவளைக் கடத்துவதற்காகத்தான் அன்றைக்கு திட்டம் போட்டு இருக்கிறார்கள்!
கிட் ஏன் இப்படி பதட்டத்துடன் ஓடுகிறார்!

அங்கே- கொள்ளையர்கள் ரூபியின் வண்டியை விரட்டி வந்தார்கள்.
டுமீல்... டுமீல்...!
அய்யோ...!
ஒரு திருப்பத்தில் கொள்ளையர் கள் வண்டியை மடக்கினார்கள்.
வாம்மா வெளியே! நான் உன்னை பத்திரமாக அழைத்துச் செல்கிறேன்!
தொடாதே என்னை...!

கொள்ளையர்கள் ரூபியை சிறைக் கைதியாக்கி அழைத்துச் சென்றார்கள்.
உன் அப்பனுக்கு உன்மேல் எவ்வளவு பாசம் இருக்கிறது என்று பார்த்து விடலாமா?
என்னை வைத்து என் அப்பாவிடம் பணம் பறிக்க முயலுகிறாயா?

அரை மணிக்கு பிறகு கிட் அங்கே வந்து சேர்ந்தார்.
கிட்! கொள்ளையர்கள் ரூபியை கடத்திக்கொண்டு வடக்குப் பக்கமாக செல்கிறார்கள்!
ஓ.கே.! அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்! நீ பண்ணைக்குச் சென்று பெர்தினிடம் விவரத்தை எடுத்துச்சொல்!


உடனே அவன் நேராக பண்ணைக்கு வந்து விவரத்தை கூறினான்.
ரூபியை கொள்ளையர்கள் கடத்திச் சென்று விட்டார்கள். கிட் அவர்களை விரட்டிப்போய் இருக்கிறான்!
அடப்பாவிகள்! வாருங்கள் நாமும் உடனே புறப்படுவோம்!


உடனே பெர்தின் தன் ஆட்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.
கவலைப்படாதீர்கள்! எப்படியும் ரூபியை மீட்டுவிடலாம்!
வேகமாக வாருங்கள்! என் மகளை காப்பாற்ற வேண்டும்!

அதேநேரம்– மெக்சிக்கோவின் எல்லையில– எல்லைக் காவல் படையினர் கிட்டை வழிமறித் தார்கள்.
நீ அமெரிக்கன்தானே! கடத்தல் தொழில் செய்கிறாயா?
சே! இவர்களுக்கு எப்படி புரியவைப்பது!
கிட்டை முகாமுக்கு அழைத்துப் போனார்கள்.
எங்கள் கர்னல் உன்னை விசாரிப்பார்! அதுவரை நீ காவலில் இரு!
கிட்டை காவலில் வைத்தார்கள்.
கிட் சமயம் பார்த்து தனக்கு கா வல் இருந்தவனை தாக்கினார்.
ஆ... ஆ....
உங்கள் கர்னல் வந்து விசாரிப்பதற்குள் என் வேலை கெட்டு விடும்!
கிட் முகாமில் இருந்து தப்பி வெளியே வந்தார்.
கொள்ளையர்கள் ரூபியை அந்த மர்ம மாளிகைக்குத்தான் அழைத்துச் சென்று இருப்பார்கள்!

மர்ம மாளிகையில்– சார்லஸ், ரூபியை அடைத்து வைத்து இருந்தான்.
நீ கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணினாலும் வெளியே கேட்காது. இது ஒரு மர்ம மாளிகை! சுவர்கள் கடினமானது. சன்னல்கள் கிடையாது!
யாரும் உன்மேல் அனுதாபப்பட்டு காப்பாற்ற வர மாட்டார்கள்!

கிட்சார்சன் அந்த மர்ம மாளிகைக்கு வந்தார். வாசலில் காவல் பலமாக இருந்தது.
டேய்...! ஒரு பெண்ணை கடத்திவந்து உள்ளே அடைத்து வைத்திருக்கிறீர் களா? இந்தா...?
டமால்...!
ஆ...! அம்மா...!
கிட் துப்பாக்கியை திருப்பி ஒன்று கொடுத்தார் அவன் வலிதாங்காமல் துடித்து விழுந்தான்.

இட் காவலாளிகளை தாக்கிவிட்டு அந்த அறைக்குள் நுழைந்தார்.
ரூபி! முன்வழியாக வெளியே போய் குதிரையில் ஏறிக்கொள்! நான் இவர்களை ஒருகை பார்த்துவிட்டு வருகிறேன்!
ஓ.கே.!

அடுத்த பத்து நிமிடத்தில்– இட்டும், ரூபியும் குதிரையில் சிட்டாக பறந்து கொண்டிருந் தார்கள்.
விரைவாகப் போ ரூபி! அவர்கள் எந்த நேரமும் நம்மை பின்தொடரலாம்!

அதேநேரம்- கொள்ளையர்களின் ஒருபகுதி, பெர்தின் பண்ணைக் குச் சென்று மாட்டு மந்தையை ஓட்டி வந்துகொண்டிருந்தார்கள்.
நம் திட்டப்படியே பெர்தினின் ஆட்கள் நம்மைத் தேடி புறப்பட்டிருக்கிறார்கள்!
அது நமக்கு மிகவும் நல்லதாகிப் போய்விட்டது! மந்தையை சுலபமாக ஓட்டிவந்து விட்டோம்!

ரூபி! கொள்ளையர்கள் உங்கள் மந்தையை விரட்டி வருகிறார்கள்! நம்மைப் பார்த்துவிட்டனர்! வா. அந்த பாறைக்குப்பின் பதுங்கிக் கொள்ளலாம்!
டேய்! கிட், பெர்தின் மகளை சார்லசிடம் இருந்து மீட்டுவந்துவிட்டான்! விரட்டுங்கடா...!
கிட்டை விடக்கூடாது! சுட்டுத்தள்ளுங்கள்!
கிட்டும், ரூபியும் கொள்ளையர்களிடம் இருந்து தப்புவதற்காக அந்தப் பெரிய பாறைக்குப்பின் பதுங்கிக்கொண்டார்கள்.
மாடுகள் சிதறி ஓடின.

இட் பாறைக்குப் பின்னால் பதுங்கிக்கொண்டு கொள்ளையர்களை நோக்கி சராமாரியாக சுட்டார்.
டுமீல்...
ஆ... அம்மா...
டுமீல்...
அந்தப் பள்ளத்தாக்கே துப்பாக்கிக் குண்டுகளால் அதிர்ந்தது.

தற்குள் பெர்தினும் தன் ஆட்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்.
னவரும் சேர்ந்துகொண்டு கொள்ளையர்களை மடக்கினார்கள
டுமீல்...! டுமீல்...!
கொள்ளையர்களால் சிதறி ஓட முடியாமல் சரணடைந்தார்கள்.
கிட்...! நீங்கள் மட்டும் வராவிட்டால் என் வாழ்க்கையே முடிந்திருக்கும்!
ரூபி! யாருக்கு ஆபத்து என்றாலும் அங்கே கிட்தான் முன்நிற்பான்!
ஆமாம், ரூபி! நமமைப் போன்ற பணணைகளுக்கு கிட்கார்சன்தான் காவல்...!
(முடிந்தது)



உயரமான மனிதர்!

படத்தில் இருப்பவரை பார்க்க வேண்டுமானால் அண்ணாந்துதான் பார்க்க வேண்டும். இவர் கடந்த சில ஆண்டுகளாக வளர்ந்துகொண்டே இருக்கிறார். இப்போது இவரது உயரம் 7 அடி 6 அங்குலம் ஆகும்.

இவருக்கு 18 வயதுதான் ஆகிறது. இவர் பெயர் சுட்டையா. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்.

'பிட்யூட்டரி' சுரப்பி கோளாறு காரணமாக இவர் இப்படி வளர்ந்துகொண்டே செல்கிறார் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். இவர் வளர வளர உடலில் பல இடையூறுகளும் ஏற்படுத்துகின்றன.

★ 12 ஆண்டு சிறைத் தண்டனையில் இருக்கும் வங்காளதேச முன்னாள் அதிபர் எர்ஷாத், அவரது மனைவியைப் பார்ப்பதற்கு தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

★ முதல்வர் ஜெயலலிதா இருதய அறுவை சிகிச்சைக்காக 15 பேருக்கு இரண்டரை இலட்ச ரூபாய் பண உதவி செய்திருக்கிறார்.

★ டெல்லி மேல்-சபைக்கு தமிழ் நாட்டில் இருந்து 6 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.


முகமூடிவீரர் மாயாவி
தோன்றும்
மரணக் கடல்
கடலுக்குள் சென்றவர்கள் யாரும
உயிரோடு திரும்பியதில்லை!
ஆனால் மாயாவி செல்கிறார்!!
விறுவிறுப்பான படக்கதை!
படிக்கத் தவறாதீர்கள்!
ஜூலை 16-ந்தேதி வெளிவருகிறது!
"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

RANI COMICS
Registered as Newspaper in Sri Lan